# இந்தியா தனது ஆலோசனைகளை சந்திரிகாவிடம் வலியுறுத்தும்


விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 11 இதழ் 46
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-3-1995


(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னை தொடர்பாகவும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும் இந்தியா தனது ஆலோசனைகளை ஜனாதிபதி சந்திரிகாவிடம் வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிலங்கா ஜனாதிபதிக்கும் இந்திய ஜனாதிபதிக்கும் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தைகளில் தமிழீழ விடுதலைப் போராட்டம தொடர்பாப இந்தியத்தரப்பில் எழுப்பகபடும் எந்தசர்ச்சைகள் தொடர்டாகவும் சிறிலங்கா ஜனாதிபதியால் ஈடுபாடு காட்டமுடி

(4ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து திரும்பிய 64 தமிழ் குடும்பங்கள் யாழ். வந்து சேர்ந்தன

(திருநெல்வேலி)

கடந்த வருடம் பிற்பகுதியில் இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் இலங்கை தலைமன்னாருக்கு அனுப்பப்பட்ட வட பகுதியைச் சேர்ந்த அகதிகள் அங்கிருந்து வவுனியாவில் தங்க வைக்கப்பட்டு 4 மாதங்களின் பின் நேற்று யாழ் வந்து சேர்ந்தனர்.

64 குடும்பத்தைச் சேர்ந்த நூற்றைம்பதுக்கும் மேலானவர்கள் நேற்று மாலை யாழ். வந்து சேர்ந்தனர். இவர்களை யு. என். எச். ஸி. ஆர். கொழும்பு பிரதிநிதி கொபனர். மடு அகதி முகாம் அதிகாரி வார்லி

(4ம் பக்கம் பார்க்க)

# ★ இனப்பிரச்னைக்கான அரசின் தீர்வுத்திட்டம் தயார்

# புலிகள் பேச்சுக்கு வரவேண்டும்

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

[கொழும்பு]

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது சம்பந்தமான அரசின் தீர்வு திட்டம் தயராகி விட்டது விடுதலைப்புலிகள் பேச்சுக்கு வரவேண்டும் என்றுநீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்,

அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது: இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது சம்பந்தமான பிரேரணைகளை தெரிவிப்பதற்கு விடுதலைப் புலிகளிடமிருந்து திகதியொன்றை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. புலிகளின் பதிலின் அடிப்படையில் அடுசதமாதம்முதல் வாரத்தில் அரசியல் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க முடியும். மார்ச் 17ம் திகதி' 22ம் திகதி

(4ம் பக்கம் பார்க்க)

## மாகாண அபிவிருத்திக்கு 3 நிதியம் ஆரம்பிக்கபடும்

[கொழும்பு]

வடயேல் மாகாணம். கிழக்கு மாகாணம், தெற்கு மாகாணம் ஆகியவற்றை அபிவிருத்திசெய்ய மூன்று நிதியங்களை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

ஒவ்வொரு நிதியத்திலும் பத்துக்கோடி ரூபா ஒதுக்கிடப்படும் தனியார் துறையில் இருந்து இதற்கான நிதியைப் பெறுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. -ரி

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நிறுவப்படும்

(கொழும்பு)

சுதந்திரமான அரசாங்க சேவை ஒன்றை மீண்டும் சட்டியெழுப்பும் முகமாக புதிய அரசாங்க சேவைகள் ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்கள் ஆறுஆண்டு திட்டமொன்றிகீழ் அமுல் செய்யப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

(4ம் பக்கம் பார்க்க)

## 4-ம் கட்டப் பேச்சுக்களை இந்திய பேச்சு பாதிக்கலாம்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடன் சிறிலங்கா அரசாங்கம் 4-ம் கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் சந்தர்ப்பம் கிடைக்கும் எனில் இந்திய அரசாங்கத்துடன் ஜனாதிபதி சந்திரிகா தற்போது மேற்கொள்ளவுள்ள பேச்சு வார்தைகளின் விளைவுகள் அதைப் பாதிக்கும் எனவும் கொழும்பில் அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

காலத்திற்குக் காலம் இலங்கை இனப்பிரச்னையில் இந்தியா தலையீடுகாட்டியமையின் தொடராக இது இருக்கும் எனவும் ஆனல் இந்தியத தலையீடு ஏறபடுமெனில் விடுதலைப் புலிகள் அதினை ஏற்கமாட்டார்களெனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா நான்கு நாட்கள் இத்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்று கொழும்பிலிருந்து புறப்பட்டுள்ளார். ரி

## பிரபாவை நாடுகடத்தும்படி சோனியா ராவுககு அழுத்தம்?

[புதுடில்லி]

ராஜீவ்காந்தி கொலை தொடாபாக இந்திய அரசுக்கு திருமதி சோனியாகாந்தி அழுத்தம் கொடுத்து வருவதால் விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவிடம் இந்தியா முதன் முதலாக பேசப்போவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவின் கொலை விடயத்தில் அரசு மெத்தனம்காட்டி வருவதாக சோனியா காந்தி கருதுகிறார். இதனல் இது தொடர்பாக அரசுக்கு அவர் அழுத்தம் கொடுத்து வருகி[illegible]

இதனல் ராஜீவின் கொலை குறித்து இலங்கையிடம் பேச மறுத்த இந்திய அரசு ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவில் தங்கிநிற்கும்போது இதுபற்றி பேச்சு வார்த்தை நடத்தும் என்று அந்தச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. ரி

## தொழில்வங்கி சான்றிதழ் சமர்ப்பித்தல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நிர்வாக சேவையினரால ஆரம்பித்து வைக்கப்பட்ட தொழில் வங்கியில் ஏற்கனமே தொழில்பெறும் பெறும் பொருட்டு விண்ணப்பித்தவர்களும், விண்ணப்பிப்பவர்களும் தாங்கள் விண்ணப்பிதத விண்ணப்பத்தின் பிரகாரம் பிறபு அத்தாட்சிப்பத்திரம், பாடசாலை விடு

(4ம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸிலிருந்து மேலும் ஒரு விமானக் கொள்வனவு

(கொழும்பு)

இலங்கை பிரான்ஸின் முக்கிய கொம்பனி ஒன்றிடமிருந்து மேலும் ஒரு விமானத்தை கொள்வனவு செய்யவுள்ளது.

முன்னைய அரசாங்கம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்கீழ் கொள்வனவு செய்யப்படும் மூன்றுவது விமானம் இதுவாகும்.

புதிய விமானக் கொள்வனவுக்கு 35 கோடி 60 லட்சம் அமெரிக்க டொலர் செலவாகின்றது.

இந்த விமானம் இன்று சனிக்கிழமை கொழும்பு வந்துசேரும் என தெரிவிக்கப்படுகிறது. —ரி

## பொருளாதாரத்தடை வடபகுதிக்கு அவசியமற்றது

### ராவய ஆசிரியர் விக்டர் ஐவன்

(கொழும்பு)

வடபகுதிக்கு பொருளாதாரத்தடை தேவை இல்லாத ஒன்று அதுநீக்கப்பட வேண்டும். யூரியா உரத்தை தடை செய்திருப்பது உண்மையில் நகைப்பைத் தருகிறது. எரிபொருள் இல்லாமல் ஒருபகுதி மக்கள் எப்படி தமது அன்றுட அலுவல்களைக் கவனிக்க முடியும்?

ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் யாழ் வந்து திரும்பியபின் ரூபவாஹினிக்கு நேற்று பேட்டியளித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்

ஒப்சேவர் பத்திரிகை ஆசிரியர் அஜித் சமரநாயக்காவும் இந்தபேட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

திரு. விக்டர் ஐவன் தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:

உரம் இல்லாது விவசாயி எவ்வாறு விவசாயம்செய்ய முடியும்?

பெற்றோல், டீசல் என்பவற்றுக்குத் தடைவிதித்திருப்பது வாகனங்களுக்குத்தடைவிதித்திருப்பதற்கு ஒப்பானதாகும்.

யாழ்ப்பாணம், கொழும்பு-காலி தூரத்தைப்போல்மூன்று

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### மணமககள் தேவையா

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள், 33 வயது செவ்வாய்க் குற்றமற்ற டொக்டருக்கு பெண் தேவை, மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம், (சி-1422)

### இன்று செவ்வாய் வக்கிர சஞ்சாரம் முடிவு

இன்றுடன் செவ்வாய் வக்கிரகம் முடிவடைகின்றது இச் சமாதான ஆண்டில் அமைதிப் பேச்சுக்கள் பரிணும வளர்ச்சியடையும், புத்தாண்டுப் பலன்கள் எங்கும் விற்பனையாகிறது, 'சத்யப'' கட்டுடை, (சி-1421)

### சிரமதானப்பணி

(கொழும்புத்துறை)

வலிகாமம்-மேற்கு பிரதேச அபிவிருத்தி சபை உடுவில் உப அலுவலகத்துக்கு உட்பட்ட பூவோடை இந்துமயானம் சிரமதானம் மூலம் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டது. -154

### வீதிகள் சீர்கேடு

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பகுதியிலுள்ள முக்கிய வீதிகள் குண்டும் குழியுமாகபோக்குவரத்து மிகவும் சீர்கெட்டநிலையில் காணப்படுகின்றது சித்தன்கேணி சந்தியில் இருந்து சங்கானை செல்லும் பிரதான வீதி மிகவும் மோசமான முறையில் போக்குவரத்திற்கு கஷ்டமாக இருப்பதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். 72

### நடமாடும் செயலகம்

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகம் நடாத்தி வரும் நடமாடும் செயலகத்தின் நான்காவது நடமாடும் செயலகம் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நாளை 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது. 72

### சைவநெறித் தேர்வு பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை கடந்த வருடம நவம்பர் மாதம் நடாததிய சைவநெறித் தேர்வுக்குரிய பெறுபேறுகள் கடந்த பெப்ரவரிமாத நடுப்பகுதியில் தேர்வில் பங்குபற்றிய சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பெறுபேறுகள் கிடைக்கப்பெருத பாடசாலை அதிபர்களை தேர்வுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. -162

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவில் அரசியல் துறை யாழ். மாவட்டச் செயலகத்தில நடைபெறவுள்ளது. இதில் வலிகாமம்-கிழக்கு, வலிகாமம்-மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி தீவக உதைபந்தாட்டச் சங்கங்களிலிருந்து தலா மூன்று பிரதிநிதிகளை தவருது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொள்கின்றது.''

### புதிய பஸ்சேவை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவை ஒன்றியம் கடந்த 15ம் திகதி புதன் கிழமை தொடக்கம் வடலியடைப்பு' பிரான்பற்று தொட்டிலடி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களுக்கு ஊடாக யாழ். நகருக்கு மினிபஸ் சேவையை ஆரம்பித்துள்ளது -72

### நோயாளர் அதிகரிப்பு

(நெல்லியடி)

மந்திகை மருத்துவமனையிலுள்ள இரத்கப் பரிசோதனை நிலையத்திற்கு. மூளை மலேரியா நோயினுல் பாதிக்கப்பட்டவர்ளின் வருகை அதிகரித்துள்ளது.

அதிகமாக வடமராட்சி கிழக்கு பருத்தித்துறை, கற்கோவளம் போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களே இந்நோய்க்கு இலக்காகி பரிசோதனையை மேற்கொண்டு சிகிச்சையைப் பெற்று வருகின்றனர். -160

## இன்று

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்திய சாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் வ. யோகானந்தசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

0 0

[அரியாலை]

கீரிமலை- சுவாமியம்மாவின் 72வது ஜயந்தி தினம் நாளை ஞாயிறு காலை 10-30 மணியளவில் சங்கானை- இலுப்பைத்தான் முருகமூர்த்தி ஆலயத்தில், சைவப்புலவர், வித்துவான் திரு வ. செல்லையா தலைமையில் கொண்டாடப்படும் 59

0 0

[கொம்புத்துறை[

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின விசேட ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று 25ம் திகதி சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு சம்மேளனத் தலைவர் திரு. ந. போஷன் தலைமையில் இல. 33. பருத்தித்துறை வீதியிலுள்ள சம்மேளனக் காரியாலயத்தில் நடைபெறும். 154

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–03-25**

**சனி இரவு**

08-02 புரட்சிக் குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
8-30 - செய்திகள்
08-40 கலந்துரையாடுவோம் - ''இன்றைய சிறு கதைகள்''

**1995-03-26**

**ஞாயிறு காலை**

07-02 மாவீர வணக்கம்
07-15 களத்தில் மலர்ந்வை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–03-25**

**சனி மாலை**

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் வினுடி வினுப் போட்டி
06-00 சிந்தனைக்குச் சில வினுடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## இல. தமிழ் அகதிகள் விவகாரததில்

# தமிழக அரசு நெருக்குதல்

(சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளனை வரையும் தொடர்ந்து இலங்கைக்கு அனுபபி வைக்கும்படி தமிழக அரசு மத்திய அரசை மீண்டும் வற்புறுத்தவுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இது பற்றி பி. பி. சி. மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரு வருடங்களாக தமிழகத்தில தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் 62 ஆயிரம் பேரை இரு கப்பல்களில் 14 தடவை திருமலைக்கும், மன்னுருக்கும் தமிழக அரசு அனுப்பியுள்ளது

இன்னும் 54 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகள் 120 முகாம்களில இருக்கின்றார்கள் இவர்களுடன் 19 சிறப்பு முகாம்களில் 1700 இலங்கைப் போராளிகள் இருககிறார்கள். இவர்களையும் உடனடியாக இலங்கைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யும்படி தமிழக அரசு, மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்கதொடங்கியுள்ளது

மேற்படி 1700 பேரில் 370 பேரை இலங்கை அரசு ஏற்க மறுத்துவிட்டது. இந்த 370 பேரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்பதால் இலங்கை அரசு இவர்களை மறுத்துவிட்டது.

மற்ற அனைவரையும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அனுப்பி வைக்க தமிழக அரசு முயற்சி செய்கின்றது. இவர்கள் அனைவரும் ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவருகின்றது. என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. -வி-இ

## பெண்களும் சுகவாழ்வும் நாளை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பெண்களும் சுகவாழ்வும் என்ற விடயம் தொடர்பாக பரந்த விழிப்புணர்வை கிராமிய மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்கமாக மகளிர் அபிவிருத்தி நிலையம் ஓர் கருத்தரங்கை நாளை ஞாயிறு பி.ப. 2 மணிக்கு உருப்பிராய் வசாவிளான் ம மகாவித்தியாலயத்தில் நடாத்தவுள்ளது.

இக்கருத்தரங்கில் உடல் நலம், உளநலம், துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளல், துன்பங்களுக்கான ஆத்மீகத் தேடல் போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளன. டாக்டர் சி. எஸ் நச்சினர்க்கினியன், கலாநிதி சபா ஜெயராஜா, திருமதி சரோஜா சிவச்சந்திரன், திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாறறவுள்ளனர் இக்கருததரங்கில் உருப்பிராய் பகுதி சார் ஆண்கள், பெண்கள் உட்பட 60ற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள உள்ளனர். -சி

### மக்கள் அஞ்சலி

[நெல்லியடி]

தியாகி அன்னை பூபதியின் நினைவைக் கூரும் வகையில் வடமராட்சிப்பகுதியில் பிரதான வீதிகளிலும் சந்திகளிலும், அரச தனியார் நிறுவனவாயில்களிலும் சனசமூக நிலையங்களிலும், பாடசாலைகளிலும் அவரது திருஉருவப் படம் வைக்கப்பட்டு, மலர்மாலை சாத்தி சுடர்ஏற்றி அஞ்சலி செலுத்தப்படுகிறது. - 150


## பொதுமக்களுக்கான அறிவித்தல்

அரசடி வீதியும், பிறவுண் வீதியும் சந்திக்கும் சந்தியில் உள்ள அரசமரத்தை வீதி விஸ்தரிப்புக்காக தறிக்க வேண்டியுள்ளது. அம்மரத்தை கூடிய சீக்கிரத்தில் தறித்து அகற்ற வேண்டியுள்ளதனுல் அதனை வாங்கவிரும்புவோர் தங்கள் கோரல் விண்ணப்பங்களை 03-04-95 ற்கு முன்னதாக பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

உதவிப் பொது முகாமையாளர்,
சூழல் பாதுகாப்புப் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்
யாழ். மாவட்டச் செயலகம்,
இருபாலை வீதி, கோண்டாவில்

(ஏ-4849)

உ
சிவமயம்

## கொழும்பு மாநகரில்.....

இலங்கை இந்துமத குருபீடாதிபதி,
கலாநிதி, வேதாகமபூஷணம்
சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்
அவர்களின்

## பீடாரோஹண
## பாராட்டுவிழா

காலம் :
26 – 3 – 95 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :
மாலை 4-00 மணி முதல் இரவு 9-00 மணி வரை
இடம் :
சண்முகவிலாஸ் மண்டபம்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்,
ஜிந்துப்பிட்டி

இலங்கை — இந்திய சிவாச்சார்யர்கள்
தலைமையில்
விழா நடைபெறும்.

★ இந்துமத பெருமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

★ விசேட இன்னிசை ★

டி. எம். எஸ். செல்வகுமார்
[ தென்னிந்தியப் பாடகர் ]

இங்ஙனம்
திரு. D. மாணிககம் J. P.
தலைவர்,
விழா ஏற்பாட்டு குழுவினர்

[சி-1424]


### வருடாந்தப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் 13வது வருடாந்தப் பொதுக் கூட்டம், திருநெல்வேலி இ த.க. பாடசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு திரு. பூ க. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

### கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். பிரதேசச் செயலர் பிரிவு யாழ். பிராந்திய சபையின் கீழ் இயங்கும் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். சென் சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் சபையின் தலைவர் திரு. மோசேஸ் எட்வேட் தலைமையில் நடைபெறும். -154

### மாணவர் உணவு முத்திரை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை செல்லும் 5-18 வயதுக்கு உட்பட்ட (1977-1990 வரை பிறந்த) பிள்ளைகளை உடைய குடும்பத் தலைவர்கள், தத்தம் பிரிவிலுள்ள கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளம்படுகின்றனர். 31ம் திகதிக்குப் பின்னர் முத்திரைகள் வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விலங்கியல் பட்டறை

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உ. த.) மாணவர்களுக்கு உதவுமுகமாக விலங்கியல் (பூச்சியியல்) செய்முறைப்பட்டறைகள் யாழ். பல்கலைக்கழக மாணவரின் உதவியுடன் பல்வேறு கோட்டங்களில் நடைபெறவுள்ளது. மேற்படி பட்டறை க. பொ. த. (உ. த) மாணவர்களுக்கு ஒரு சேவையாக இப்பயிற்சி நடாத்தப்படவுள்ளது.

இப்பட்டறையின் ஏழாவது செயலமர்வு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் இன்று 25ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4-30 மணி வரை நடைபெறும். -ரி

### மணிவாக்கு

தீவிர ஆசையினுல் சில காரியங்கள் வெற்றி பெறுகின்றன. அதைவிட அமைதியான முன் யோசனையால் பல காரியங்களில் வெற்றி கிடைக்கின்றன.

- தூஸிடைடிஸ்

## நமது நோக்கு

### இனப்போர் தவிர்க்க...!

சோவியத்தின் கம்யூனிசக் கொள்கை நச்சுக் காற்றுப் போன்றது. எனவே அதன் பரவலைத் தடுக்க முன்வாருங்கள் என அமெரிக்கா அழைப்பு விடுத்தது.

சோவியத் ருஷ்யாவைச் சுற்றிப் பல இராணுவ ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. செடுபிடிப் போர் பல்வேறு ரூபங்களில் நடந்தது.

இரண்டாவது உலகப் போருக்குப் பின் பிரதான கதையாக இருந்தது. இதனுல் அமெரிக்க ஆயுத விற்பனையாளர்கள் இலாபம் அடைந்த கதை பிரதான உபகதை என்பது வேறு விஷயம்.

இன்று - சோவியத் ஒன்றியம் உருக்குலைந்த பின் வேறு கதை ஆரம்பமாகி விட்டது.

அமெரிக்க - ஐரோப்பிய அச்சுறுத்தல்களைக் காட்டி சோவியத் முகாமிற்குள் சிறுபான்மை இன மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள்.

அதேபோல - மற்றைய முகாமிற்குள் கம்யூனிசப் பூதத்தைக் காட்டிச் சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் காலில் மிதிபட்டன.

கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்தபின், சிறுபான்மை இன மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்ட முற்பட்டார்கள்.

செஸ்னியாவிலும், பொஸ்னியாவிலும் நடைபெறும் இனமோதல்கள் ஐரோப்பிய நாடுகளை விழிப்படையச் செய்துள்ளன.

எனவேதான் - ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 15 நாடுகளும், போல்டிக் நாடுகளும், சோவியத் பிடியிலிருந்து விலகிய கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் ஒன்று கூடி மாநாடு நடத்தியுள்ளன.

இந்த 50 நாடுகளும் ஸ்திர நிலை ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கியுள்ளன. அத்தோடு - தங்களுக்கிடையேயான 80 ஒப்பந்தங்களையும் உருவாக்கின.

சிறுபான்மை இனங்களுக்குப் போதிய உரிமைகள் வழங்குவது, தேசிய எல்லைகள் குறித்த முரண்பாடுகளைத் தவிர்ப்பது போன்ற பல கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன.

சிறுபான்மை இனங்கள் பற்றிய ஐரோப்பிய விழிப்புணர்ச்சி அலை ஆசியாவிலும் வீசாது இருக்குமா?

# பிரபாவை அனுப்ப கோரும் விடயம் தொடர்ந்து பரிசீலனையில்

— இந்திய அதிகாரி கூறுகிறுர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை விசாரணைக்காக இந்தியாவுக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கையை கோரும் விடயம் இன்னமும் கூட பரிசீலனையில் இருந்து வருவதாக இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக "இந்திய வானெலி" நேற்று தெரிவித்தது.

ஜனுதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் இந்தியப் பயணத்தில் இரு நாடுகளுக்கிடையில் பல்வேறு விடயங்களில் ஒத்துழைப்பைவளர்க்கவும் இருதரப்பு உறவுகளையும் வலுப்படுத்துவதே முக்கிய நோக்கமாக அமையும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்

இதேவேளை சோனியா காந்தி உட்பட இந்திய அதிகாரிகள் எவரும் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துமாறு சோரவில்லையென்று கொழும்புத் தினசரி ஒன்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை வெளியுறவு அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் இதை வலியுறுத்தி கருத்துக்கள் வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ம-சி

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில்

# வெளிநாடுகள் வழங்கவிருந்த பெருமளவுநிதிகிடைக்கவில்லை

(கொழும்பு)

சுடந்த காலததில் ஐக்கிய தேசியக் கட்சியின் போக்கினுல் வெளிநாடுகளிலிருந்து கிடைக்க வேண்டிய பெருமளவு நிதி கிடைக்கவில்லை என்று ஜனுதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; அபிவிருத்திக்காக கிடைத்த நிதிகள் கூட, பூரணமாக பயன்படுத்தப்படவில்லை. இந்நிதிகளில் பெருமளவு மோசடிகள் இடம் பெற்றுள்ளன, இதனுல பல நாடுகள் தமது நிதி உதவியை நிறுத்திக் கொண்டன எனவும் குறிப்பிட்டார்.

ஐ. தே. க ஆட்சியின் போது அபிவிருத்திக்கென உதவி வழங்கும் நாடுகளிகளிடமிருநதும் பெறப்பட்ட பல ஆயிரம்கோடி ரூபாக்கள் யுத்தத்திற்காக செலவிடப்பட்டதும் அதில் பெருமளவு பணம் மோசடி செய்யப்பட்டதும தெரிந்ததே

இதேவேளை வடக்கு-கிழக்கு அபிவிருத்தியென பொய்ப் பிரசாரம் செய்துவரும் தற்போதைய பொ. ச. மு. அரசு வெளிநாடுகளிடமிருந்து பெருமளவு பணத்தை பெற முயல்வதும் குறிப்பிடத்தக்கது.

ம-சி

★ கட்டுநாயக்கா ஆடை தொழிற்சாலையில்

# இரவு நேர உணவில் நஞ்சு 700 யுவதிகள் ஆஸ்பத்திரியில்

(கொழும்பு]

கட்டுநாயக்காவில அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினமிரவு வழங்கப்பட்ட உணவை உட்கொண்ட 700க்கும் மேற்பட்ட யுவதிகள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உணவில் நச்சுத்தன்மை ஏற்பட்டதால் தொழிலாளர்கள் உணவை அருந்தி சில நிமிட நேரங்களில வாந்தி மற்றும் மயக்க நிலையை அடைந்தனர். இதையடுத்து உடனடியாக இவர்கள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அங்கிருந்து வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

'சீமான் சேட் காமன்ஸ் பக்டரி' என்ற நிறுவனத்தில் பணியாற்றும் பெண் ஊழியர்களே பாதிக்கப்பட்டவர்களாவர்.

இதுகுறித்து கட்டுநாயக்கா பொலிஸார் தீவிரவிசாரணைகளை நடாத்தி வருவதுடன் சமையல்காரரர் இதுவரையும் பொலிஸார் கைதுசெய்துமுள்ளனர்.

ம-சி

நாடாளுமன்றில் புதிய அமைப்பு:

# அமைச்சர் அஷ்ரப் தலைமையில் தமிழ், முஸ்லிம் எம். பிக்கள்

(கொழும்பு)

நாடாளுமன்றில் உள்ள தமிழ், முஸ்லிம் எம். பி.க்கள் தமது உரிமைகளை வலியுறுத்தும் நோக்கில், அமைச்சர் அஷ்ரப் தலைமையில் கூட்டணி ஒன்றை அமைத்துள்ளனர்.

கடந்த வாரம் அமைக்கப்பட்ட இக்கூட்டணியில் தமிழ், முஸ்லிம் எம். பி க்கள் 30பேர் அங்கம் வகிக்கின்றனர். இதன் தலைவராக அமைச்சர் அஷ்ரப்பும், செயலாளராகப் பிரதி அமைச்சர் சந்திரசேகரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அமைப்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ. பி. டி. பி., தமிழர் விடுதலைக் கூட்டணி, இ. தொ. கா., புளொட், சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர்

இந்த அமைப்பு, ஜனுதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளுடன் நடாத்தும் பேச்சுக்களின் போது இந்த அமைப்பைப் புறக்கணித்து நடப்பதைத் தவிர்க்கும் முகமாக, ஜனுதிபதி சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுக்க முனையும் எனவும் 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது.

-சி

ம. ஐ. மு — ஐ, ஐ. தே. மு.

# வட — கிழக்கு இணைப்பை எதிர்த்து தெரிவுக் குழுவிடம் யோசனை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அரசியல் அமைப்புச் சீர்திருத்தத்திற்கான நாடாளுன்றத் தெரிவுக் குழு முன்னிலையில், மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. தினேஷ் குணவர்த்தனுவும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த எம். பி யான திரு. ரவி கருணநாயக்காவும் சாட்சியம் அளித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு இணைப்பை முற்ருக எதிர்த்ததுள்ள இவர்கள், அதிகாரப் பரவலாக்கல் ஜனுதிபதி ஆட்சி முறை ஒழிப்புடன் தொடர்பு உடையதாக இருக்கக்கூடாது எனவும் தமது யோசனையில் வற்புறுத்தி உள்ளனர்.

மேலும் அதிகாரப் பரவலாக்கல், ஜனுதிபதி ஆட்சி முறை ஒழிப்பு மற்றும் இவற்றுடன் தொடர்பான விடயங்கள் குறித்து, மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும் எனவும் திரு. தினேஷ் குணவர்த்தனு தெரிவுக் குழுவிடம் கூறியுள்ளார்.

இந்த விடயங்களில் மக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனநாயகஐக்கியதேசிய முன்னணியும் ஒன்றிணைந்து செயற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

-சி

எங்கள் மண்ணுக்காக போர் தொடுப்போம்
எங்கள் மண்வளம் காக்க மரங்களை நாட்டுவோம்

## பலதும் பத்தும்

### வேம்படி - கவிதை

பாலர் வகுப்பில் பலராக சேர்ந்து...... இடையில் நழுவி — வடித்தெடுத்தவர்கள் A/Lக்கு வந்து.... ஒன்றுகூடல் நிகழ்ச்சிக்குப் பின் .....பிரியாவிடை கூறி விட்டு... பின்??? வேம்படி மகளிர் கல்லூரி —— ஒன்றுகூடல்...... கவிதை ஒன்று வழங்கப்பட்டது. பாடசாலையைப் புகையிரத நிலையமாகவும். வந்து போகும் வகுப்புகளை புகையிரதங்களாகவும் ஆசிரியர்களைப் புகையிரத நிலைய அதிகாரிகளாகவும் கவிதை சித்தரிக்கிறது.

"தன் கடமை முடிந்த திருப்தியுடன் மீண்டும் இருண்ட பனிப்போர்வையுள் மூழ்கிப் போவார் நிலைய அதிகாரி: இனி...... அடுத்த வண்டி வரும்!

ஏக்கம், பிரிவு ஆகிய அவலச் சுவைகள் மாத்திரமல்ல..... நாட்டுக் கல்விநிலை பற்றிய கருத்தும் காணப் படுகிறதல்லவா?

— மயூரன்

## இராசி பலன்

25-3-1995

சனிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி-11)

நவமி பி. ப. 1-20 வரை, பூராடம் முற்பகல் 11-36 வரை. அமிர்தயோகம், இராகுகாலம் காலை 9 15 முதல் 10-45 வரை. சுப வேளை மாலை 3-15 முதல் 4-45 வரை.

மேடம்- பிறர் கண்டனம், விரோதிகள் பயம், காரிய தாமதம்

இடபம்- முதியோர் சகவாசம், தொழில் நஷ்டம், வீண் சச்சரவு.

மிதுனம்- நல்லோர் உதவி, பணப்புழக்கம், மனக்களிப்பு.

கடகம்- தெய்வீக தரிசனம், புத்திரர் பெருமை, புதிய அனுபவம்.

சிங்கம்- கருத்து மோதல், பணியாள் துன்பம், யோசனை.

கன்னி- மனத்தாங்கல், அதிகாரிகள் பயம், அலைச்சல்.

துலாம்- சுபச்செய்தி, சகோதர உதவி, கலைஞானம்.

விருச்சிகம்- வாய்த்தர்க்கம், அசாத்திய துணிச்சல், வெறுப்பு.

தனுசு- நினைத்ததை சாதித்தல், மாதர் அறிவுரை, விருந்தோம்பல்.

மகரம்- பழிவாங்கப்படல், தடுமாற்றம், விரோதிகள் பயம்.

கும்பம்- சுபகாரியம், வெளியார் அனுகூலம், தானதர்மம்.

மீனம்- குழம்பித் தெளிக்ல், அதிகாரச் சிறப்பு, பகைமையுணர்வு.

— ஜோஸ்யர்

### தவக்கால நற்சிந்தனை

"நான் உமக்கு செலுத்த வேண்டிய பலி நொருங்கிய உள்ளமே!!

(சங்.50:17)

வேதனை உறுகிறது உள்ளம் வேடிக்கை காட்டுகிறது உலகம். வாடிக்கையான வாழ்வு சகஜம். நொருங்கிய உள்ளத்தோடு நாம் வாழ்வமைத்தால் அவரின் அன்புக்கு அடிமையாலுல் அவரின் கருணையால கட்டுண்டு வாழ்வோம்.

— தா. மைதிலி

# வடக்குகிழக்கு பகுதிகளில் நடமாடும் சேவை!

]கொழும்பு]

வடக்கு - கிழக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் இனம் காண்பதற்காக நடமாடும் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு கண்டு அந்தப் பகுதி மக்களுக்கு உரிய உரிமைகள் அனைத்தையும் தாமதமின்றி நிறைவேற்றுவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

முதலாவது நடமாடும் சேவை அண்மையில் அம்பாறையிலும் அக்கரைப்பற்றிலும் நடைபெற்றது.

நடமாடும் சேவைக்கு தங்கள் குறைகளை தெரிவிப்பதற்காக வந்தவர்கள் பலர் தாங்கள் பல வருடங்களுக்கு முன்னர் இழந்த தங்கள் உரிமைகளை மீட்டுத்தருமாறு கேட்டுக் கொண்டார்கள்.

நடமாடும் சேவை அலுவலகத்திற்கு பத்தாயிரத்திற்கும் அதிகமான பிரச்னைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. -ரி

# சோனியாவின் பாதுகாப்புக்கு 25 குண்டு துளைக்காத கார்கள்

## தமிழக பத்திரிகை தகவல்

[புதுடில்லி]

சோனியா காந்தி வசிக்கும் பங்களா முன் குண்டு துளைக்காத 25 அம்பாஸிட்டர் கார்கள் எப்போதும் நின்று கொண்டிருப்பதைக் காணலாம். இப்போதே இப்படியென்றால் சோனியா அரசியலில் ஈடுபட்டால் பாதுகாப்பு ஏற்பாடுகளை இன்னும் ஏற்படுத்தவேண்டி வரும் என தமிழக பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இயங்கும் முக்கிய ஏழு அறக்கட்டளைகளின் அதிபதி சோனியா வாகும். நேருதொடங்கி இந்திரா ராஜீவ் என மூன்று பிரதமர்களின நினைவாக நிறுவப்பட்ட ஏழு அறக்கட்டளைகளின் உயர் தலைமை சோனியாவுக்கே உரியது.

இந்த அறக் கட்டளைகளின் மொத்த முதலீடு மட்டுமே சுமார் 40கோடி ரூபாவாகும்.

40 கோடி ரூபா அமைப்புக்களின் அதிபதி சோனியா டில்லி சாம்ராஜ்யத்தின் மகாராணி என இவரை இந்தியா டுடே வர்ணித்துள்ளது. ரி

# அகதிகளைக்கட்டுப்படுத்த பிரிட்டனில் புதிய சட்டம் அமுல்

(லண்டன்)

பிரிட்டனில் சட்டவிரோதமாகக் குடியேறுவோர் தொகை அதிகரித்து வருவதனுல் புதிய சட்ட விதிகளை அமுல் நடத்த இருப்பதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத்தில் இந்தப்புதிய சட்டவிதிகள் சமர்ப்பிக்கப்பட இருப்பதாகவும் இதனுல் பிரிட்டனில் அகதி அந்தஸ்து கோருவோரின் தொகையை கட்டுப்படுத்த முடியுமென்று பிரிட்டிஷ் அரசுப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இப்புதிய சட்டவிதிகள் பற்றி தற்போது பிரிட்டிஷ் அமைச்சரவை தீவிரமாக பரிசீலித்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. வி ரி

## மரண அறிவித்தல்

### திருமதி அருணுசலம் இரத்தினம்

(உரும்பிராய் மேற்கு)

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த திருமதி அருணுசலம் இரத்தினம் வெள்ளிக்கிழமை மாலை சிவபதம எய்திஞர். அன்ஞர் காலஞ்சென்ற பூபாலுஐயா (நடராசா), பஞ்சாட்சரம், அன்னலிங்கம் (கொழும்புத்துறை ஐயஞர் கோயில் பூசகர்), அமிர்தலிங்கம் [சமூக சேவை உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்] ஆகியோரின் அருமைத்தாயாரும், வாலாம்பிகை, ஈஸ்வரி, பூபதி, சோதிமணி ஆகியோரின் பிரியமுள்ள மாமியாருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று 25- 3- 95 சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் உரும்பிராய் மேற்கிலுள்ள அன்ஞரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர் நண்பர்களை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் தயவாக வேண்டிக் கொள்ளுகிருேம்.

தகவல்;

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்

(மகன்)

(சி-1423)

### சின்னையா சொக்கநாதபிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

வண்ணுர்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற இராமநாதர் சின்னையா இராசம்மா தம்பதிகளின் கனிஸ்ட புதல்வனும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருமாகிய (இளையதம்பி மகாவித்தியாலம்) சின்னையா சொக்கநாதபிள்ளை அவர்கள் 21-3-1995ல் காலமாஞர். அன்ஞர் காலஞ்சென்ற பத்மாவதியின் (இளைப்பாறிய ஆசிரியை வண்/நாவலர் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், முகுந்தன், சபேசன், தயாபரன், மால்மருகன், சதானந்தி, சடாச்சரன் ஆகியோரின் அருமைத் தந்தையாரும். வித்துவான் இ, சி. சோதிநாதன், இலங்கேஸ்வரி நடராசா. குணேஸ்வரி நடராசா, இ. சி. தில்லைநாதர்மூர்த்தி, பஞ்சாச்சரேஸ்வரி, கிருஷ்ணதேவா ஆகியோரின் அருமை சகோதரரும் ஆவார். அன்ஞரின் இறுதிக் கிரியைகள் 26-3-95 ஞாயிறு காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 8-30 மணிக்கு கோம்பன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

சொ. முகுத்தன்

(மகன்)

29, கோபால் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி-1425)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-

### தொழில் வங்கி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பத்திரம், கல்விச் சான்றிதழ், தொழில் பயிற்சிக்கான சான்றிதழ், குடும்பப்பதிவு அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றை சமர்ப்பித்து பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுறனர்.

### அரசாங்க

1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல் செய்வதற்கான வழிவகைகள் பற்றி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். ரி

### இனப்பிரச்சனைக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் இரண்டு கடிதங்களை விடுதலைப் புலிகள் அனுப்பிவைத்துள்ளார்கள். வடபகுதி மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை நீக்குவதற்கானவழிவகைகளை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரப்பட்டிருந்தது.

மார்ச் 28 ம் திகதியை கால எல்லையாக விதித்து அனுப்பிய கடிதத்திஞல் எந்த வித அச்சுறுத்தலும் இல்லை, விடுதலைப் புலிகளின் அனைத்து கோரிக்கைகளும் அரசாங்கத்திஞல் பரிசிலனை செய்யப்படுகின்றன.

அவர்களது சகல கோரிக்கைகளையும் பூர்த்தி செய்வது என்பது இயலாத விடயம். அவர்களது கடிதங்களில் உடன்பாடு தெரிவிக்கக்கூடிய மற்றும் உடன்பாடு தெரிவிக்க முடியாத பல விடயங்கள் அடங்கியிருந்தன.

அரசியல் தீர்வுக்கான பிரேரணைகளை விடுதலைப் புலிகளிடம் அனுப்பிவைத்த பின்னர் எந்தவித தாமதமும் இன்றி அரசியல் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான திகதி தீர்மானிக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இனப்பிரச்னையை தீர்த்து வைப்பதற்கான அரசியல் யோசனைகள் அடங்கிய திட்டத்தை அரசாங்கம் வகுத்துள்ளது.

சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கான திகதியை நிர்ணயிக்கும்படி ஜஞதிபதி சந்திரிகா குமாரதுங்க புலிகளுக்கு ஏற்கனவே அறிவித்துவிட்டார்.

விடுதலைப்புலிகள் இந்த யோசனைகளை பரிசீலிப்பதற்கு சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக அரசியல் யோசனைகள் அடங்கிய திட்டத்தை அரசாங்கம் அனுப்பி வைக்க தயாராக இருக்கின்றது. இது தொடர்பானபேச்சுவார்த்தைகளை ஏப்பிரல் மாதம் 2-ம திகதிக்கும் 10ம் திகதிக்குமிடையே நடந்த முடியும என்றும் அரசாங்கம் புலிகளுக்கு அறிவித்துள்ளது.

நிலையான பல யோசனைகள் இதில் அடங்குகின்றன. இதே சமயம் ஏனைய யோசனைகள் குறித்து மாற்றங்களுக்கும் இடமளிக்கின்றது.

அரசியல் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடத்தப்பட்டு அது பற்றி சமரசம் காணப்படும் என்று அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது. -வி-ரி

# பேராதனை வெளிவாரிப் பரீட்சை ஏப் 6 முதல் 22வரை நடைபெறு

[மானிப்பாய்]

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை 1994-ம் ஆண்டுக்கு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை நடைபெறும் திகதி எதிர்வரும் 6-4-95 முதல் 22-4 95 வரை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெருதோர் பேராதனை வெளிவாரிப் பரீட்சைத் திணைக்களத்தில் நேரடியாகச் சென்று பெற்றுக்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

மேலும் 1995-ம் ஆண்டுக்குப் பதிவு செய்யும் விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 31 எனவும் கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. -71-இ

### இந்தியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாத இக்கட்டான நிலைமை உள்ளது என கொழும்புசெய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் போராட்டம் தொடர்பாகவோ தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை தொடர்பாகவோ சிறிலங்கா அரசு பிரகடனம் ஒன்றை மேற்கொள்ள வேண்டுமென இந்திய அரசாங்கம்வற்புறுத்துமெனில் அதை தடுக்கவே சிறிலங்கா அரசாங்கம் முற்படும் எனவும் நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது

எனினும் இப்பிரகடனத்தை முழுமையாக தெரிந்து கொள்வதற்கு ஒரு கால அவகாசம் தேவையென ஜஞதிபதி சந்திரிகா இந்தியாவிடம் வேண்டிக்கொள்வார் எனவும் சிறிலங்கா அரசாங்கம் போர் ஒன்றை ஆரம்பிக்கும் கால எல்லைக்கு சாதகமாக இக்கால அவகாசம் அமையுமென வும் எதிர்பார்கப்படுகிறது.

ஏப்பிரல் பிற்பகுதியில் நடைபெறவுள்ள பாரிஸ் மாநாட்டில் நோக்கத்தை அடைவதற்கு முன்பு விடுதலைப் புலிகள் மீது போர் பிரகடனம் ஒன்றை மேற்கொள்ள ஜஞதிபதி சந்திரிகா விரும்பமாட்டார்.

இதேவேளை இந்தியாவின் கோரிக்கைகளையும் உடனடியாக ஜஞதிபதியால் எதிர்க்க முடியாது. இதனுல் இந்திய விஜயத்தின்போது புலிகளுடனுன சமாதான முயற்சிகள் தொடர்பாக ஒரு தலைபட்சமான ஆதரவு தேடும் நிலையில் ஜஞதிபதி இருக்கிருர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. - ரி

## திருட்டுப்போன றேடியோ மீட்பு

(ஆனைப்பந்தி)

றேடியோ திருடிய நபரொருபர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த க. ஜெகன் மோகன் என்பவர் வீட்டிற்குள் வைத்துவிட்டுச் சென்ற தனது றேடியோ திருட்டுப்போனதை அடுத்து யாழ் காவல்நிலையத்தில் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் காவல்துறையினர் சந்தேகநபரிடமிருந்து றேடியோவை மீட்டுள்ளதுடன் அந்நபரையும் கைதுசெய்துள்ளனர். -101

### பொருளாதாரத்தடை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நான்கு மடங்காகும். இதனுல் ஏற்படும் லொறிச் செலவு சுமார் 14ஆயிரம் ரூபாவாகும். ஆனுல் இன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் ஏற்றிச் செல்லும் ஒரு லொறிக்கு எவ்வளவு செலவாகிறது தெரியுமா? 50 ஆயிரத்துக்கும்மேல் அதற்கு செலவாகிறது.

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லை. குப்பி விளக்கில் மாணவர்கள் எல்லோரும் கல்வி கற்கின்றனர் ஆனுல் மண்ணெண்ணை குப்பி விளக்கைப் பாவிக்கக்கூடாது என நாம் இங்கே பிரசாரம் செய்கிருேம்.

எனவே வடபகுதி மக்களின் நன்மைகருதி அரசு பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும் அல்லது வடபகுதி மக்களின் அடிப்படை மனித உரிமைகளை அரசு மறுக்கின்றது என்றுதான் இங்கே குறிப்பிட வேண்டும் என்ருா? இரி

### இந்தியாவிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா அகதி முகாம் அதிகாரிகளான டேவிற், றஞ்சன் ஆகியோரே அழைத்து வந்தனர்.

நேற்று முன்தினம் காலை வவுனியாவிலிருந்து மூட்டை முடிச்சுகளுடன் பெரும் சிரமத்துடன் புறப்பட்டு வந்த இவர்கள் இன்று காலை 17 மணியளவில் கிளாலிக்கரையை வந்தடைந்து மாலை லொறிகள் மூலம் இங்கு வந்து சேர்ந்னர்.

குருநகர், மானிப்பாய, முல்லைத்தீவு, உடுப்பிட்டி. புத் பகுதிகளைச் சேர்ந்தவர்களே அதிகமானவர்களாவர். இவர்கள் இந்தியாவில் கடந்த $4\frac{1}{2}$ வருடங்களுக்கு மேலாக அகதி முகாம்களில் இருந்து பல துன்பங்களை அனுபவித்து வந்ததாக தெரிவித்துள்ளனர். 157-ரி